# ரோக்மா இலவச அஞ்சல்வழி வேதாகமக் கல்வி

*தபால் பெட்டி எண் - 9, No.8, பாரதியார் 2 வது தெரு, S.S. காலனி மதுரை – 10.* Ph. 0452 – 4354302

## நமது திரியேக தேவன்

**முன்னுரை :**

வேதாகமத்தின் தேவன் ஒருவராயிருந்தும் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்ற மூன்று ஆள்தன்மைகளில் தம்மை வெளிப்படுத்தியுள்ளார். இப்படி தேவன் மூவராகத் தம்மை வெளிப்படுத்தின போதிலும் கூட ஒருவராகவே இருக்கிறார். வேதத்தை அறிந்துகொள்ளவும், விசுவாசத்தைக் காத்துக்கொள்ளவும், சுவிசேஷத்தை மற்றவர்களுக்குச் சொல்லவும், மனித அறிவுக்கு எட்டாத இந்த பரம இரகசியத்தைத் தேடி அறிந்துகொள்ள கிறிஸ்தவர்கள் ஆர்வம் உள்ளவர்களாயிருக்க வேண்டும்.

### இந்தப் பாடத்தின் முக்கியத்துவம் :

1. இந்த உலகத்தில் ‘‘கடவுள் ஒருவர்’’ என்ற கோட்பாட்டினைக் கொண்ட மதங்கள் மூன்று உள்ளன. அவைகள் யூதமதம், இஸ்லாம் மதம், கிறிஸ்தவ மதம். நாம் தேவனின் நற்செய்தியை இந்த உலகத்திற்கு அறிவிக்கப் போவோம் என்றால், கிறிஸ்தவத்தின் மேன்மை இன்னதென்று நாம் அறிந்திருக்க வேண்டும்.

2. கிறிஸ்தவத்தில் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி அல்லது திரித்துவத்தைக் குறித்துப் போதிக்கப்படும் போதனைக்கு விரோதாக குற்றஞ்சாட்டுபவர்களுக்கு பதில் கொடுக்க நாம் தயாராக இருக்கவேண்டும்.

3. வேதத்தில் கொடுக்கப்பட்டுள்ள பரிசுத்த திரித்துவமானது ஏகசத்திய தெய்வத்தை வெளிப்படுத்துகிற மகிமையான ஒன்றாகும். இந்த ஒப்பற்ற போதனையானது பல தெய்வங்களை நம்புகிற மதத்தவரின் கோட்பாடுகளுக்கு வித்தியாசப்பட்ட ஒன்றாகும்.

4. இயேசுகிறிஸ்துவையும், பரிசுத்த ஆவியானவரையும் தெய்வம் இல்லை என்று மறுக்கிற கூட்டத்தாருக்குப் பதில் கொடுக்க நாம் ஆயத்தமுள்ளவர்களாய் இருக்கவேண்டும்.

5. வேதத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள தேவனை அறிந்துகொள்வதற்கு ‘‘தேவனுக்கு நேராக மனந்திரும்பி,’’ ‘‘ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு,’’ ‘‘பரிசுத்த ஆவியானவரால்’’ மறுபடியும் பிறக்கவேண்டும் (அப்போஸ்தலர் 20:21; யோவான் 1:12, 3:5).

தேவனை அறிந்து அவரைக்குறித்து மற்றவர்களுக்கு நாம் சொல்ல வேண்டுமானால், மகிமையும், நித்தியமும், சர்வவல்லமையும், சர்வஞானமும், அன்பும் நிறைந்த தேவன் தம்மை பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்ற மூன்று ஆள்தன்மைகளில் வெளிப்பட்டதை நமது வாழ்க்கையில் அறிந்தும், அனுபவித்தும் இருக்கவேண்டும். இதுவே இப்பாடத்தின் மகா முக்கியமான நோக்கமாகும்.

### I. வேதம் தேவனுடைய ஒற்றுமையை வெளிப்படுத்துகிறது:

| | | | |
|---|---|---|---|
| அ. | ஏசாயா 45:22 | .. | ‘‘என்னை நோக்கிப் பாருங்கள், நானே தேவன், வேறொருவரும் இல்லை.’’ |
| ஆ. | ஏசாயா 45:5 | .. | ‘‘நானே கர்த்தர், வேறொருவர் இல்லை, என்னைத் தவிர தேவன் இல்லை.’’ |
| இ. | ஏசாயா 44:6 | .. | ‘‘நான் முந்தினவர், என்னைத் தவிர தேவன் இல்லையென்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.’’ |
| ஈ. | 1 தீமோத்தேயு 2:5 | .. | ‘‘தேவன் ஒருவரே.’’ |
| உ. | 1 கொரிந்தியர் 8:4 | .. | ‘‘உலகத்திலே விக்கிரகமானது ஒன்றுமில்லை என்றும், ஒருவரையன்றி வேறொரு தேவன் இல்லை என்றும் அறிந்திருக்கிறோம்.’’ |
| ஊ. | உபாகமம் 6:4 | .. | ‘‘இஸ்ரவேலே கேள் : நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்.’’ |
| எ. | எபேசியர் 4:5 | .. | ‘‘ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும்.’’ |

**குறிப்பு :**

‘‘ஒற்றுமை’’ என்பது தேவனுடைய இயற்கையான பண்புகளில் ஒன்றாகும்.

ஒற்றுமைக்கு விளக்கம் :

தேவன் நமக்குத் தம்மை மூன்று ஆள்தன்மைகளில் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்று வெளிப்படுத்திய போதிலும், அவர் பிரிக்கமுடியாத பரிபூரணமான, சதாகாலங்களிலும் இருக்கிறவர் என்ற நிலைக்கு ‘‘ஒற்றுமை’’ எனப்படும்.

<u>குறிப்பு :</u>

தேவனுக்கு நம்மை சமர்ப்பிக்க வேண்டியது நம்முடைய தலையாய கடமையாகும்.

உபாகமம் 6:4,5 : ‘‘நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர். ஆகையால் நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக.’’

## II. பன்மடங்கான காரியங்கள் ‘‘ஒன்று’’ என வேதாகமம் நமக்குப் போதிக்கிறது :

அ. ஆதியாகமம் 2:24 .. ‘‘அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாய் இருப்பாகள்.’’

ஆ. ஆதியாகமம் 11:6 .. ‘‘இதோ ஜனங்கள் ஒரே கூட்டமாய் இருக்கிறார்கள்.’’

இ. 1 கொரிந்தியர் 3:6,8 .. ‘‘மேலும் நடுகிறவனும், நீர்ப்பாய்ச்சுகிறவனும் ஒன்றாயிருக்கிறார்கள்.’’

ஈ. 1 கொரிந்தியர் 12:13 .. ‘‘எல்லாரும் ஒரே ஆவியினாலே, ஒரே சரீரத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டோம்.’’

உ. யோவான் 17:22 .. ‘‘நாம்ள ஒன்றாயிருக்கிறது போல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி. . . . .’’

ஊ. கலாத்தியர் 3:28 .. ‘‘நீங்கள் எல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்.’’

## III. இதைப்போன்றே தேவன் தம்மை மூன்று ஆள்தன்மைகளில் வெளிப்படுத்தி இருப்பினும் அவர் ஒருவரே :

<u>குறிப்பு :</u>

‘‘ஒன்று’’ என்ற வார்த்தைக்கு எபிரெய பாஷையில் ‘‘யாசீடு’’ (YACHEED) என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு ‘‘ஒன்று மட்டும்’’ என்று பொருள். இந்த வார்த்தை தேவனின் திரியேகத்துவத்தை குறிப்பதற்கு பயன்படுத்தப்படவில்லை. மேலே கொடுக்கப்பட்டுள்ள வேத வாக்கியங்களில் ‘‘ஒற்றுமை’’ என்ற வார்த்தைக்கு எபிரெய பாஷையில் ‘‘யாகாது’’ (ECHAD) என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது.

**அ. தேவன் என்ற வார்த்தை பன்மையாகும் :**

1. ஆதியாகமம் 1:1 .. ‘‘ஆதியிலே தேவன்’’ (ELOHIM) ‘‘ஏலோகிம்’’ என்கிற வார்த்தை பன்மையைக் குறிக்கிறது. பொதுவாக இந்த வார்த்தை (ஏலோகிம்) பழைய ஏற்பாட்டில் தேவனின் திரியேகத் தன்மையைக் குறிக்கிறது. இந்த வார்த்தை தேவன் என்பதற்கு பழைய ஏற்பாட்டில் சாதாரணமாக உபயோகிக்கப்பட்டுள்ளது.

**ஆ. தேவன் தம்மைக்குறித்துப் பேசும்பொழுது பன்மையை** (PLURAL PRONOUNS) **உபயோகித்தார் :**

1. ஆதியாகமம் 1:26 .. ‘‘பின்பு தேவன் : நமது சாயலாகவும், நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக என்றார்.’’
2. ஆதியாகமம் 3:22 .. ‘‘இதோ மனுஷன் நம்மில் ஒருவரைப்போல் ஆனான் என்றார்.’’
3. ஏசாயா 6:8 .. ‘‘யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான் என்றார்.’’

<u>குறிப்பு :</u>

ஆதியாகமம் 1:26–ல் வரக்கூடிய ‘‘நமது’’ என்ற வார்த்தை தேவதூதர்களைக் குறிப்பது இல்லை. ஆனால் தேவனின் திரியேகத் தன்மையைக் குறிக்கக்கூடியதாகவே இருக்கிறது. மனிதன் தேவதூதர்களின் சாயலில் சிருஷ்டிக்கப்படாமல் தேவசாயலில் சிருஷ்டிக்கப்பட்டான்.

## IV. வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள ‘‘தேவன்’’ பழைய ஏற்பாடு – புதிய ஏற்பாடு இவை இரண்டிலும் திரியேக தேவனாகவே போதிக்கப்பட்டுள்ளார் :

**அ. பழைய ஏற்பாட்டில் :**

i) பார்வையில் படும்படி தோன்றின கர்த்தரின் தூதனானவர் :

உதாரணம் :

1. ஆதியாகமம் 16:7–12 .. இந்தப் பாகத்தில் கர்த்தரின் தூதனானவர் ஆகாருக்கு தரிசனமானதைக் காண்கிறோம்.
2. ஆதியாகமம் 18–ம் அதிகாரத்தில் கர்த்தரின் தூதனானவர் ஆபிரகாமுக்குத் தரிசனமானதைக் காண்கிறோம்.

3. யாத்திராகமம் 3:2–ல் கர்த்தரின் தூதனானவர் மோசேக்குத் தரிசனமானதைக் காண்கிறோம்.
4. நியாயாதிபதிகள் 6:11–ல் கர்த்தரின் தூதனானவர் கிதியோனுக்குத் தரிசனமானதைக் காண்கிறோம்.
5. 2 சாமுவேல் 24:16,17–ல் கர்த்தரின் தூதனானவர் தாவீதுக்குத் தரிசனமானதைக் காண்கிறோம்.

<u>குறிப்பு :</u>

தேவன் தாமே மனிதனுக்குத் தம்மை வெளிப்படுத்தினார் என்று தெளிவான இந்தத் தோற்றங்கள் நிரூபிக்கின்றன.

ஆதியாகமம் 31:11–13 .. ''பெத்தேலிலே உனக்குத் தரிசனமான தேவன் நானே என்றார்.''

யாத்திராகமம் 3:2–6 .. ''உன் பிதாக்களுடைய தேவனாயிருக்கிறேன் என்றார்.''

ஆதியாகமம் 18:13 .. ''கர்த்தர் ஆபிரகாமை நோக்கி : . . . . .''

ii) பரிசுத்த ஆவியானவரின் மகிமையான பணி :

கீழே கொடுக்கப்பட்டுள்ள வேதவசனங்களை வாசிக்கவும் :

1. ஆதியாகமம் 1:2, 6:3, 41:38
2. யாத்திராகமம் 28:3, 31:5
3. எண்ணாகமம் 11:17, 11:25

iii) ஏலோகிம் என்ற வார்த்தைக்கு பன்மைப் பெயர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

iv) தேவன் தம்மைக்குறித்துப் பேசும்பொழுது மறுபெயர்களை (PRONOUNS) உபயோகித்தார். ''நமது சாயலாகவும், நமது ரூபத்தின்படியேயும்'' மனுஷனை உண்டாக்குவோமாக என்றார்.

**ஆ. புதிய ஏற்பாட்டில் :**

<u>குறிப்பு :</u>

புதிய ஏற்பாட்டில் தேவன் திரித்துவத்தைக் குறித்து சாதாரணமாகக் குறிப்பிடாமல் திட்டமாகவும், தெளிவாகவும் போதிக்கப்பட்டுள்ளது.

1. இயேசுகிறிஸ்து ஞானஸ்நானம் பெற்றபொழுது : (மத்தேயு 3:16,17)
2. குறிப்பாக இந்தப் பாகத்தில் மூன்று ஆள்தன்மைகளை நாம் காணலாம். 'பிதா' பரலோகத்திலிருந்து பேசுகிறார், 'குமாரன்' ஞானஸ்நானம் பெறுகிறார், 'பரிசுத்த ஆவியானவர்' புறாவைப் போல வானத்திலிருந்து இறங்கி வருகிறார்.
3. இயேசுகிறிஸ்து சபைக்குத் தனது மாபெரும் கட்டளையைக் கொடுக்கும்போது : (மத்தேயு 28:19)

   பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே சீஷர்களுக்கு ''ஞானஸ்நானம்'' கொடுக்கவேண்டும்.
4. 2 கொரிந்தியர் 13:14–ம் வசனத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் விசுவாசிகளை ஆசீர்வதிக்கும்பொழுது இந்த வார்த்தைகளை உபயோகிக்கிறார் :

   ''கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும் உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக'' என்றார்.
5. 1 பேதுரு 1:2–ல் 'பிதாவானவர்' தெரிந்துகொள்கிறார், 'பரிசுத்த ஆவியானவர்' பரிசுத்தம் செய்கிறார், 'இயேசுகிறிஸ்து' தம்முடைய இரத்தத்தினாலே கழுவுகிறார்.
6. யோவான் 14:16–ல், ''நான் (தேவகுமாரன்) பிதாவை வேண்டிக்கொள்வேன்; அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனே கூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய (பரிசுத்த தேவ ஆவியானவர்) வேறொரு தேற்றரவாளனை அவர் (தேவன்) உங்களுக்குத் தந்தருளுவார்.''
7. ''போர்டுமென்'' என்கிற வேத சாஸ்திரி தேவனின் திரியேகத் தன்மையை இவ்வாறு தொகுத்துக் கூறுகிறார் :

   ''யாராலும் காணப்பட முடியாத பரிபூரண தெய்வீகத்தை தேவன் கொண்டவராக இருக்கிறார்'' (யோவான் 1:18). தேவகுமாரனாகிய கிறிஸ்துவும் பரிபூரண தெய்வீகத்தைக் கொண்டவராக காணக்கூடிய நிலையில் வெளிப்பட்டிருந்தார் (யோவான் 1:14–18; கொலோசெயர் 2:9). பரிசுத்த ஆவியானவரும் பரிபூரண தெய்வீகத்தைக் கொண்டவராகவும் உடனடியாக நம்மில் கிரியை நடப்பிக்கிறவராகவும் இருக்கிறார் (1 கொரிந்தியர் 2:9,10; எபேசியர் 5:18).

## V. தேவனின் திரியேகத் தன்மைக்கு உதாரணங்கள் :

**குறிப்பு :**

திரியேக தேவனைக் குறித்ததான மகிமையுள்ள இந்த இரகசியத்தை எதுவாகிலும் முழுமையாகவோ அல்லது சரியாகவோ விளக்க முடியாது. இதை அறிந்துகொள்வதற்குச் சில எளிய உதாரணங்களை உபயோகிப்பது நலமாயிருக்கும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **ஆவி** | **–** | **ஆத்துமா** | **–** | **சரீரம்** | **=** | **மனிதன்** |
| **நீராவி** | **–** | **பனிக்கட்டி** | **–** | **நீர்** | **=** | **தண்ணீர்** |

ஆனாலும், இது ஒரு பூரணமான உதாரணமாக இருக்க முடியாது.

**முடிவுரை :**

திரியேகத் தேவனைக் குறித்ததான போதனை மகிமையுள்ள இரகசியமாகும். இப்போதனையை ஒரு மனிதனும் முழுமையாக அறிந்துகொள்ளவில்லை. வேதத்தில் தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ள மாறாத சத்தியம் இது. ஆகையால் இந்த சத்தியத்தை மற்றவர்களுக்குப் போதிக்க வேண்டும், அறிவிக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல் நாம் இந்த சத்தியத்தில் வளர வாஞ்சையுள்ளவர்களாய் இருக்கவேண்டும். தெய்வீகத்தில் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் மூவரும் ஒன்றே. ஆனால் ஒவ்வொருவரும் செய்யக்கூடிய பணிகளில் வித்தியாசம் உண்டு. மூவர் செய்யக்கூடிய பலதரப்பட்ட பணிகளை பயன்படுத்திக் கொள்ளக்கூடிய நிலையில் நாம் இருக்க வேண்டும். இரட்சிப்பின் தேவனுக்குள் நாம் மகிழ்ந்து களிகூர வேண்டும்.

**மாணவர் கவனத்திற்கு :**

1. வேகமாக இப்பாடத்தை மாத்திரம் படிப்பதினால் வேத அறிவோ அல்லது ஆவிக்குரிய வளர்ச்சியோ உண்டாகாது.
2. விடைத்தாள்களில் உங்கள் விடைகளை அளிக்குமுன்னதாக பாடத்தையும், கேள்விகளையும் தெளிவாகப் புரிந்து கொண்டீர்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

# நமது திரியேக தேவன்

*ஒவ்வொரு மாணவரும் பதில் அளித்து அனுப்ப வேண்டிய முகவரி*

இயக்குனர், *ரோக்மா இலவச அஞ்சல் வழிக் கல்வி, தபால் பெட்டி எண் - 9, மதுரை - 625 010.*

**[பூர்த்தி செய்த பின்பு விடைத்தாளை மட்டும் தனிப்படுத்தி தபாலில் அனுப்பவும்]**

**சரியான விடையை வட்டமிட்டு ○ காட்டவும்**

1. திரித்துவம் போதனை மிகவும் முக்கியம் – காரணம் என்ன ?
   a. கிறிஸ்தவர்கள் மூன்று தெய்வங்களை ஆராதிக்கிறார்கள்
   b. ஒவ்வொரு திருச்சபையிலும் நம்பப்பட்ட பழைய உபதேசமாகும்
   c. வேதாகமத்தின் போதனையாக இருக்கிறது
2. ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களைக்குறித்து பேசக்கூடியதும், அதேசமயம் ஒரே நபரைக் காண்பிக்கிறதுமான வேதவசனங்களை கூறு. **(இரண்டை வட்டமிடவும்)**
   a. ஆதியாகமம் 11:6
   b. ஆதியாகமம் 31:11
   c. ஆதியாகமம் 1:26
   d. யோவான் 17:22
3. ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களைக்குறித்து தேவன் எந்த வசனங்களில் பேசுகிறார் ?
   a. ஏசாயா 6:8
   b. யாத்திராகமம் 3:6
   c. ஆதியாகமம் 11:6
4. ‘ஏலோகிம்’ என்கிற வார்த்தை தேவனைக்குறித்து காண்பிப்பது என்ன ?
   a. ஒரே நபர்
   b. ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள்
   c. மூன்று நபர்கள்
5. தேவன் திரித்துவமுள்ளவர் என்று ஞானஸ்நானம் காண்பிக்கிறது, காரணம்
   a. ஒரு நபர் தண்ணீரில் முழுகுகிறார்
   b. அந்த நேரத்தில் அவர்மீது பரிசுத்த ஆவியானவர் வந்திறங்குகிறார்
   c. பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவரின் நாமத்தில் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள கட்டளையிடப்பட்டுள்ளது
6. திரித்துவத்தில் ஒவ்வொரு நபரும் செய்யக்கூடிய பணி என்ன ?
   a. செய்வதற்கு வெவ்வேறு பணிகள் உண்டு
   b. ஒருவர் செய்வதையே மற்றொருவர் செய்கிறார்
   c. பிறருடன் ஒத்துப்போவதில்லை
7. ஆதியாகமம் 1:26–ல் உள்ள ‘நமது’ என்கிற வார்த்தைப் போதிப்பது என்ன ? (வசனத்தை எழுதாமல் வசனத்தின் அடிப்படையில் எழுதவும்)

   ----------------------------------------------------------------------------------------------------

   ----------------------------------------------------------------------------------------------------

8. ஆதியாகமம் 16:7–12–ன்படி திரியேக தேவன் தம்மை எப்படி வெளிப்படுத்தியுள்ளார் ? (வசனத்தை எழுதாமல் வசனத்தின் அடிப்படையில் எழுதவும்)

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

9. யோவான் 14:16–ல் இயேசுவானவர் போதிப்பது என்ன ? (வசனத்தை எழுதாமல் வசனத்தின் அடிப்படையில் எழுதவும்)

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

10. 2 கொரிந்தியர் 13:14–ம் வசனம் போதிப்பது என்ன ? (வசனத்தை எழுதாமல் வசனத்தின் அடிப்படையில் எழுதவும்)

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

அவசியமாக உங்கள் பெயரையும் முழு முகவரியையும் தெளிவாக எழுதவும்

பதிவு எண் : ____________________

முழு பெயர் : ____________________________________________

முகவரி : ____________________________________________

____________________________________________